Verified RealEstate™

RE REGULATORY RECORD

# RERA Document

The document as the regulator published it, reproduced in full behind this page.

Published for reference. The authority's own register is the operative record.

Verified RealEstate™
3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai 600 097, India

hello@verified.realestate
+91 9996 12 9996
verified.realestate
DIGITALLY VERIFIED RECORD

## மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை: நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப.,

(தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 120–இன் கீழ்)

ந.க .எண்: எப்1/10028/2024 நாள்.31.07.2024

பொருள்: மனைப்பிரிவு – நாகர்கோவில் மாநகராட்சி – வேம்பனூர் கிழக்கு கிராமம் புல எண்:805/3B1A, 3B1B, 3B2–இல் 5776 ச.மீ. (1.426 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு – இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

பார்வை: 1. கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்: YO4EU5GR/2024/TCP, நாள்: 19.07.2024.

2. மாமன்ற தீர்மானம் எண்:550, நாள்:31.07.2024.

**********

பார்வையில் கண்டுள்ள கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் செயல்முறை ஆணையில் இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வேம்பனூர் கிழக்கு கிராமம் புல எண்:805/3B1A, 3B1B, 3B2–இல் 5776 ச.மீ. (1.426 ஏக்கர்) இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான வரைபடத்திற்கு SWP/ம.வ/க.கு.மா.ந.ஊ.அ எண்:33/2024–இன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இம் மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட வேம்பனூர் கிழக்கு கிராமம் புல எண்:805/3B1A, 3B1B, 3B2–இல் 5776 ச.மீ. (1.426 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் பார்வையில் கண்ட செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் திரு. T. சுயம்புலிங்கம் மற்றும் இருவர் என்பவர்களது உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

### நிபந்தனைகள்

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019–இல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்கு பொருந்தும். எனவே பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்படவேண்டும்.
2. உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை மனுதாரர் சொந்த செலவில் வருவாய் உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்து ஒப்படைக்கப்படவேண்டும்.

3. மனைகள் மற்றும் தெருக்கள் ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்திற்கு SWP/மா/வ/நா.உ.தி.கு.எண்:33/2024, (இணையதள ஒப்புதல்)–இன்படி ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்தின்படி எல்லை கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
4. தெருமுனையில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
5. மேற்சொன்ன இரு நிபந்தனைகளை நிறைவேற்றும் முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ அல்லது வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்தக்கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுளள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவை ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.
7. விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி தனிதொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒருபக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒருபக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் அனுமதிக்கப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ, அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக்கூடாது.
8. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்படவேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீட்டர் முதல் 9 மீட்டர் வரையிலான அகல சாலைகளுக்கு முன்பக்க இடைவெளிகள் 1.5 மீட்டரும், 9 மீட்டருக்கு மேல் 18 மீட்டர் வரையிலான சாலைகளுக்கு 3.00 மீட்டரும் 18 மீட்டருக்கு மேல் 30.50 மீட்டர் வரையிலான அகல சாலைகளுக்கு 4.5 மீட்டரும், 30.50 மீட்டருக்கு மேல் அகல சாலைகளுக்கு 6 மீட்டரும் கட்டட வரம்பு விடப்பட வேண்டும்.

9. மனையின் பக்க எல்கைக்கும் கட்டடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி அல்லது ஒருபக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறந்தவெளி விடப்படவேண்டும். 10 மீட்டர் வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத் திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்படவேண்டும்.

10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெருமட்டத்திற்கு உயர்த்தப்படவேண்டும்.

11. 12 மீட்டர்வரை அகலம் கொண்ட மனையின் பின்புற எல்லைக்கும் கட்டடத்திற்கும் இடையில் குறைந்தது 1.5 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி இருத்தல் வேண்டும்.

12. மனையின் எல்லைக்கும் கட்டட வரம்பிற்க்குட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 2 மீட்டர் உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எவ்வித கட்டடமோ, சுவரோ கட்டுதல் கூடாது.

13. கடைக்கால் (Foundation) அமைக்க தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர்செய்யவோ, மனையிலிருந்து மண்தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தவோ கூடாது.

14. மனையில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பு வீட்டிலும் மழைநீர் வடிகால் வசதி, கழிவு நீர் சாக்கடை வசதி போன்ற சுகாதாரவசதி பேன்றவை சுகாதார அதிகாரியின் ஒத்திசைவிற்கு ஏற்ப அமைத்தல் வேண்டும்.

15. மூலை முடக்கு பகுதிகளில் மின்கம்பங்கள், தெருவிளக்கு கம்பங்கள் எதுவும் நடுதல் கூடாது.

16. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும் நிழல்தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1 மீட்டருக்குள் அமைக்கப்படவேண்டும்.

17. மனுதாரர் மனைப்பிரிவு தொடர்புடைய உள்ளாட்சி அதிகாரியிடமிருந்து ஒப்புதல் பெற்றுக்கொள்ளவேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெறவேண்டும்.

18. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளதுபோல் உட்பிரிவு செய்துகொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்.

19. கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம், இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்துகொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

20. மனுதாரரால், தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள பூங்கா, சிறுவர் விளையாடுமிடம், திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைக்க வேண்டும்.

21. மனையின் ஊடே குறைந்த அழுத்த, உயர் அழுத்த மின்கம்பி பாதை, தந்திக்கம்பி பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

22. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைகளுக்குட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரி (Excecutive Authority) உடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுதான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனை பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

23. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

24. நிலஉரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ அல்லது இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் / மனைப்பிரிவு ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்துச் செய்யப்படும்.

25. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் – விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6x4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகாசிக்கப்பட வேண்டும்.

26. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.

27. மேற்படி மனைப்பிரிவில் சாலைகள், குடிநீர்வசதி, தெருவிளக்கு மற்றும் கழிவு நீரோடை அமைப்பதற்காக மதிப்பீடு தொகை அதிகரிக்கும் நேர்வில் கூடுதல் தொகை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

28. வீட்டுவசதி மற்றும் நகர் ஊரமைப்புத்துறை அரசாணை (நிலை) எண்:141, நாள்:16.7.2022-இல் தெரிவித்துள்ளவாறு அடிப்படை வசதிகளான சாலை, வடிகால் பராமரிப்புகளை மேற்படி மனைப்பிரிவில் 60% மனைகளில் குடியிருப்புகள் ஏற்படும் வரை அல்லது 5 வருடங்கள் இவ்விரு காலத்தில் எது பிந்தையதோ அந்த காலம் வரை மனைப்பிரிவு உரிமையாளரின் பொறுப்பில் பராமரிக்க வேண்டும்.

29. மேற்படி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடு, சாலை மற்றும் மனை ஆகியவற்றை உட்பிரிவு செய்து அதன் ஆவணங்கள் அலுவலகத்தில் சமர்பிக்கப்பட வேண்டும்.

ஆணையாளர்,
நாகர்கோவில் மாநகராட்சி.

__இணைப்பு:__

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்.

31/7/2024

__பெறுநர்:__

திரு. T. சுயம்புலிங்கம் மற்றும் இருவர்,
4/42B, தெற்கு புத்தளம்.

__நகல்:__

1. நகர் ஊரமைப்பு உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாகர்கோவில்.
2. மாநகராட்சி பொறியாளர், (அடிப்படை வசதிகள் பராமரிப்பின் பொருட்டு).

THE LANDLENS SUITE

# Eight ways to know a piece of land before you pay for it.

This report covers one part of the picture. These cover the rest, drawn from the same government records, for any property in Tamil Nadu.

### LandLens One
Ask anything about a property and get an answer grounded in live government records, with the sources shown.
/landlens/one

### Verify My Land
Every record check run on one property and returned as a single report.
/landlens/verify-my-land

### Legal Opinion
An advocate's written opinion on the title, built on the records we pull for it.
/landlens

### One Map
Every layer on one map: the parcel, its boundary, zoning, water bodies and what sits around it.
/landlens/one/map

### PriceMap
What land actually changed hands for around this plot, taken from the registered deeds.
/landlens/pricemap

### Build Scope
What you are allowed to build here: floor space, height, coverage and setbacks.
/landlens/build-scope

### Property Tracker
Watch a property and hear about it when something new is registered against it.
/landlens/property-tracker

### Deal Room
Run the transaction in one place: documents, stamping, signatures and the parties.
/landlens/deal-room

FREE TOOLS · NO ACCOUNT NEEDED

# Twenty-four checks you can run yourself, at no cost.

## Records and verification

The registers themselves, read for you.

- Encumbrance Certificate
- Patta and Chitta
- Field Measurement Sketch
- EC Analyzer
- Bank charge check
- Court case search
- Seller background check
- Approval check by survey

## Value and duty

What it is worth and what it costs to register.

- Guideline value by street
- Guideline value by survey
- Stamp duty and registration fees
- Capital gains
- Floor space index
- Area unit converter

## Zoning and land use

What the plan says can happen on this land.

- Land use zone finder
- CMDA land use check
- Coastal regulation zone
- Master plan check
- Water bodies finder
- Airport height clearance

## Registers and directories

Who holds it, and which office keeps the record.

- Find your registering office
- Temple property check
- Waqf property check
- RERA register

**Every free tool**
/tools

**Services we run for you**
/services

**The LandLens suite**
/landlens/one


hello@verified.realestate · +91 9996 12 9996

Verified RealEstate™

# Every claim in this document traces back to a government record.

- Legal opinions, due diligence and title verification
- Building plan, layout and sub-division approvals
- Completion and occupancy certificates, regularisation
- Escrow, negotiation and NRI property management
- Land survey, soil testing, architecture and construction

**Verified RealEstate**
3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai 600 097, India
**hello@verified.realestate**
+91 9996 12 9996

Prepared from the registers named on the page each finding sits on. Where a register could not be read, this document says so in its place rather than leaving the gap to be read as a clean result.